


சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 259 | 13.03.2026 | FRIDAY | MAASI : 29 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 259 | 13.03.2026 | வெள்ளிக்கிழமை | மாசி : 29 | விலை : ரூ.5/-

## பரூக் அப்துல்லா மீதான கொலை முயற்சி

# “முதல்வர் ஸ்டாலின் கண்டனம்”



சென்னை: மார்ச்.13-

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா மீதான கொலை முயற்சிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுத் தலைவரும், முன்னாள் முதல்வருமான பரூக் அப்துல்லா, ஒரு கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பினார். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், “டாக்டர் பரூக் அப்துல்லா மீதான கொலை முயற்சியை வன்மையாகக் கண்டிக்கிறேன். மக்களாட்சியில் இத்தகைய வன்முறைச் செயல்களை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

தற்போது அவர் நலமாக உள்ளார் என அறிந்து நிம்மதி கொள்கிறேன். அவருக்கும் உமர் அப்துல்லாவுக்கும் இவ்வேளையில் எனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

## பாமக பெயர், சின்னம் விவகாரம்: ராமதாஸ் வழக்குக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை



சென்னை: மார்ச்.13-

பாமகவின் பெயர், சின்னம் தொடர்பாக அன்புமணிக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த உரிமையியல் வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாமகவின் பெயர், சின்னம் பயன்படுத்த அன்புமணிக்கு தடை விதிக்க வேண்டும், பாமக தலைவர் எனக் குறிப்பிட்டு தேர்தல் ஆணையம் சின்னம் ஒதுக்கீடு செய்த கடிதம் தொடர்பான உத்தரவை ரத்து செய்து தன்னை பாமக தலைவராக அறிவிக்க கோரி பாமக நிறுவனர் ராமதாஸ் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உரிமையியல் நீதிமன்றம் அன்புமணி பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து பாமக பெயர், சின்னம் தொடர்பாக ராமதாஸ் தொடர்ந்த இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என அன்புமணி தரப்பில் பதில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மேலும் பாமக பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன் தன்னையும் வழக்கில் இணைக்க வேண்டும் என மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ராமதாஸ் தொடர்ந்த வழக்கை நிராகரிக்க கோரி அன்புமணி தாக்கல் செய்த மனு மீது மட்டுமே வாதங்களை வைக்க அனுமதிக்க முடியும் எனக்கூறி, நிராகரிக்க கோரி மனு மீது மட்டும் இரு தரப்பு வாதங்களை வைப்பதற்காக வழக்கின் விசாரணையை மார்ச் 13ம் தேதிக்கு சென்னை உரிமையியல் நீதிமன்றம் தள்ளி வைத்திருந்தது.

நாளை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வர உள்ள நிலையில், பாமக கட்சியின் பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். கட்சியின் பொதுச் செயலாளரான தன்னை வழக்கில் இணைக்க உரிமையியல் நீதிமன்றம் மறுத்து விட்டது என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் தொடர்ந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தமிழ்செல்வி, உரிமையியல் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், ராமதாஸ் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஏப்ரல் 10ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

## அலங்காநல்லூர் அரசுப் பள்ளியில் பசுமைப் புரட்சிசூரிய ஒளி மின்சாரத்துடன் காய்கறி தோட்டம்



மதுரை, மார்ச். 13-

அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பசுமைப் பள்ளித் திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் செலவில் சூரிய ஒளி மின்வசதியுடன் கூடிய காய்கறி, பழம் மற்றும் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*இயற்கை விவசாயம்:* தக்காளி, கத்தரி, கீரை முதல் கொய்யா, நாவல், ஆடாதோடா வரை பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

*சத்துணவுக்குப் பயன்:* இங்கு விளையும் விளைபொருட்கள் மாணவர்களின் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

*மின் சிக்கனம்:* சூரிய ஒளி மின்சாரம் மூலம் ஆழ்துளைக் கிணறு இயக்கப்படுவதால், பள்ளியின் மின்சாரச் செலவு பெருமளவு குறைந்துள்ளது.

மாணவர்கள் இயற்கை விவசாயத்தையும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் நேரில் கற்றுக்கொள்ளும் இந்தச் சிறப்பான முன்னெடுப்பை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.



## அறிவியல் கண்காட்சியில் அசத்திய மாணவர்கள்

## வட்டார கல்வி அலுவலர் பாண்டித்துரை பாராட்டு!

திண்டுக்கல், மார்ச்.13-

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆசிரியர் சி.கார்த்திக் வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினர் உரை:

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ரெட்டியார்சத்திரம் வட்டார கல்வி அலுவலர் பாண்டித்துரை, சர்.சி.வி.ராமன் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது நோபல் பரிசு சாதனை குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தார். மாணவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் அறிவியலில் பல்வேறு சாதனைகளைப் புரிய வேண்டும் என அவர் வாழ்த்தினார்.

பரிசு மற்றும் கௌரவிப்பு:

மாநில அளவிலான கலைத்திருவிழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு வட்டார கல்வி அலுவலர் பரிசுகள் வழங்கி கௌரவித்தார். மேலும், விழாவில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சர்.சி.வி.ராமன் முகக்கவசங்கள் (விணீளீ) வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் சி.ச. மகேஸ்வரி, இரா. நாகலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர். இறுதியில், ஆசிரியர் கா. கோகிலா தேவி நன்றியுரை ஆற்றினார்.

## தூத்துக்குடி மாணவி சம்பவத்தில் யாரைக் காப்பாற்ற திமுக முயற்சிக்கிறது? : பழனிசாமி

சென்னை: மார்ச்.13-

வேடநத்தம் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொடர்புள்ள குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாக கைது செய்து, அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறாக ஏன் ஒரு திமுக சட்டமன்ற உறுப்பினர் வந்து சமாதானம் பேச வேண்டும்? எதையாவது மறைக்கவோ, வழக்கை நீர்த்துப் போகச் செய்யவோ, குற்றவாளிகளை ஏதேனும் வகையில் காப்பாற்ற வேண்டும் என திமுகவோ, திமுக அரசோ முயற்சிக்கிறதா? என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வினவியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் பகுதியில் 12ம் வகுப்பு மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

பாலியல் வன்கொடுமையும் , பெண்களுக்கான பாதுகாப்பின்மையும், தமிழகத்தில் தினசெய்தியாகி விட்ட நிலையில், சிறுமியைக் காணவில்லை என உறவினர்கள் காவல்துறையிடம் புகார் அளித்தும் மெத்தனப் போக்குடன் செயல்பட்டுள்ளது காவல்துறை. இந்த வெட்கக்கேடான செயல், திமுக ஆட்சியின் லட்சணத்தை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது.

பத்தாம் வகுப்பில் நன்கு படித்து மாவட்ட அளவில் பரிசு பெற்று, தற்போது 12ம் வகுப்பு பயிலும் ஒரு மாணவியைக் காணவில்லை என்று புகாரளிக்க பெற்றோர் வந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, மிகவும் அலட்சியமாகவும், காணாமல் போன பெண்ணை சந்தேகிக்கும் வகையிலும் காவல்துறை செயல்பட்டதாக வரும் தகவல்கள், திமுக ஆட்சியில் காவல்துறை எந்த அளவிற்கு பெண்கள் பாதுகாப்பில் அக்கறை இன்றி சீர்கெட்டுள்ளது என்பதை காட்டுகிறது.

குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்ய வேண்டுமென உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றதாகவும், அவர்களிடம் காவல்துறையும், திமுக சட்டமன்ற உறுப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் செய்திகள் வருகின்றன. குற்றவாளிகளை உடனே கண்டறிந்து விட்டால், உறவினர்கள் போராட்டத்தை முடித்துவிடப் போகின்றனர்.

இதற்கு ஏன் ஒரு திமுக சட்டமன்ற உறுப்பினர் வந்து சமாதானம் பேச வேண்டும்? எதையாவது மறைக்கவோ, வழக்கை நீர்த்துப் போகச் செய்யவோ, குற்றவாளிகளை ஏதேனும் வகையில் காப்பாற்ற வேண்டும் என திமுகவோ, திமுக அரசோ முயற்சிக்கிறதா?

வேடநத்தம் பாலியல் கொலைக் குற்றத்திற்கான எச்சரிக்கை இருந்தும் அதைத் தடுக்காமலும், குற்றவாளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்காமலும் இருக்கும் திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

வேடநத்தம் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொடர்புள்ள குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாக கைது செய்து, அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென திமுக அரசை வலியுறுத்துகிறேன்” இவ்வாறு பழனிசாமி தெரிவித்துள்ளார்.




## “மாற்றத்தை நோக்கித் தவெக”: கடைய நல்லூரில் கேத்தரின் பாண்டியன் சரமாரிக் குற்றச்சாட்டு

கடையநல்லூர், மார்ச். 13-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் புதிய பேருந்து நிலையம் முன்பு, தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. தவெக நகர செயலாளர் பாலமுருகன் ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் நியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தவெக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் கேத்தரின் பாண்டியன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

*அரசு மீது கேத்தரின் பாண்டியன் கடும் விமர்சனம்:*

கூட்டத்தில் பேசிய கேத்தரின் பாண்டியன், "மருத்துவமனை, பள்ளிக்கூடம் போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லாத இந்த ஆட்சியை மாற்ற வந்த ஒரே தலைவர் விஜய் மட்டுமே. விலைவாசி உயர்வு, பெண்கள் பாதுகாப்பு இன்மை, மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதது எனப் பல பிரச்சினைகள் நீடிக்கின்றன. குறிப்பாக, கடையநல்லூர் பேருந்து நிலையத்தில் கழிப்பறை வசதி கூட முறையாக இல்லை; அங்கு போதைப்பொருள் கழிவுகளே மிஞ்சியுள்ளன. கோவையில் ஆரம்ப சுகாதார நிலையத்தையே ஒரு திமுக பிரமுகர் தனது வீடாக மாற்றியுள்ளார். இத்தகைய குடும்ப ஆட்சியை ஒழிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்" என்று சாடினார்.

*திமுக இளைஞரணி மாநாடு மீது கேலி:*

திமுகவின் இளைஞரணி மாநாடு குறித்து விமர்சித்த அவர், "தவெக தலைவர் விஜய்யைப் பார்த்து திமுகவினர் காப்பி அடிக்கிறார்கள். அந்த மாநாட்டில் கூட்டத்தை விட டாஸ்மாக் கடைகளை நோக்கிச் செல்லும் கூட்டமே அதிகமாக இருந்தது. வாழைத்தார்களில் தொங்கிக் கொண்டு, சமையல் பாத்திரங்களுடன் கலைந்து செல்லும் தொண்டர்களைப் பார்த்தால் திமுக மாநாட்டின் லட்சணம் தெரிகிறது" என்று கடுமையாகக் கேலி செய்தார்.

*நலத்திட்டங்கள்:*

இவ்விழாவில் ஏராளமான பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் தவெக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.


## மதுரை எய்ம்ஸில் 47% கட்டுமானப் பணிகள் மட்டுமே முடிந்துள்ளது

### ஆர்டிஐயில் தகவல்

**மதுரை: மார்ச்.13–**

மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் 47 சதவீதம் தான் நடைபெற்றுள்ளது என்ற தகவல் ஆர்டிஐ மூலம் கிடைத்துள்ளது.

தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் அருகே உள்ள திப்பணம்பட்டியை சார்ந்த சமூக ஆர்வலர் பாண்டிய ராஜா மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம் மதுரை எய்ம்ஸ் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி இருந்தார்.




அதற்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தலைமை பொது தகவல் அலுவலர் தர்ம் பீர் குமார் சிங் பதில் அளித்துள்ளார்.

அதில், மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் 47 % நிறைவு பெற்றுள்ளது எனவும், மதுரை எய்ம்ஸ் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.2,021.51 கோடி எனவும், அதில் ரூ.471.02 கோடி மத்திய பட்ஜெட்டில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அக்டோபர் 2026ல் மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும்” தலைமை பொது தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடியாக வங்கிகளை தாக்க ஈரான் திட்டம்



அமெரிக்கா, மார்ச்.13- இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க படைத்தலங்கள் மீது ஈரான் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது.

அந்த வகையில், துபாய் நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே நேற்று ட்ரோன்கள் விழுந்ததில் ஒரு இந்தியர், கானா நாட்டைச் சேர்ந்த 2 பேர், வங்கதேசத்தைச் சேர்ந்த ஒருவர் என 4 பேர் காயமடைந்தனர். இதில் இந்தியருக்கு நடுத்தர அளவிலான காயம் ஏற்பட்டதாகவும் மற்ற 3 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டதாகவும் துபாய் ஊடகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து விமானப் போக்குவரத்து வழக்கம் போல் இயங்கி வருவதாக எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகளை தாக்க ஈரான் திட்டம்:

ஈரானில் ராணுவ மையங்கள் மற்றும் அரசு கட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தி வந்த அமெரிக்க மற்றும் இஸ்ரேல் படைகள், ஈரான் பொருளாதாரத்தை முடக்க டெஹ்ரானின் உள்ள வங்கி ஒன்றின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் வங்கி ஊழியர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து ஈரான் அரசின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "எங்கள் வங்கி மீது தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக, மேற்கு ஆசியாவில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடர்புடைய வங்கிகள், பொருளாதார மையங்கள் ஆகியவற்றை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தும்" என்றார்.

இதன் காரணமாக சவுதி அரேபியா, துபாய், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

1,000 இந்தியர் தாயகம் திரும்பினர்

கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: "நேற்று முன்தினம் (மார்ச் 10) கத்தார் ஏர்வேஸ் விமானங்கள் மூலம் டெல்லி, மும்பை மற்றும் கொச்சி ஆகிய நகரங்களுக்கு 1,000 இந்தியர்கள் அழைத்து வரப்பட்டனர்.

மேலும், சவுதி அரேபியா வழியாக தரைமார்க்கமாக பயணம் செய்ய விரும்புவோருக்கு 96 மணி நேர இடைக்கால விசாக்களை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கத்தாரில் சிக்கியிருந்த இந்திய கூடைப்பந்து அணியினர் சவுதி அரேபியா வழியாக ஏற்கெனவே இந்தியா வந்தடைந்துள்ளனர். இந்தியர்களுக்காக 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாறு தூதரகம் தெரிவித்துள்ளது

# புதுச்சேரி பெட்ரோல் பங்குகளில் அலைமோதும் கூட்டம் 25 லிட்டர் தண்ணீர் கேன்களில் வாங்கிக் குவிக்கும் மக்கள்

புதுச்சேரி, மார்ச்.13- புதுச்சேரி பெட்ரோல் பங்குகளில் கூட்டம் அலைமோதுகிறது. 25 லிட்டர் தண்ணீர் கேன் மற்றும் பாட்டில்களில் பெட்ரோலை மக்கள் வாங்கிக் குவிப்பதால் பரபரப்பு நிலவுகிறது.

ஈரான் இஸ்ரேல், அமெரிக்க போரால் உலகளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுற்றுலா நகரமான புதுச்சேரியிலும் மத்திய அரசு உத்தரவின்படி வணிக சிலிண்டரின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக புதுச்சேரியில் உள்ள 750 ஓட்டல்கள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருகிறது.



அதேபோல முக்கிய ஓட்டல்களில் உணவு வகைகளின் எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் புதுச்சேரி முழுவதும் ஓட்டல்கள் முழுமையாக முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கேஸ் சிலிண்டரை நம்பி இயங்கிய சிறிய டீக்கடைகள், தள்ளு வண்டி கடைகளும் கேஸ் தீர்ந்தவுடன் மூடப்பட்டு வருகிறது. இருப்பினும் சில ஓட்டல்களில் விறகு அடுப்புகள் மூலம் சமையல் செய்கின்றனர்.

அதேநேரத்தில் வீட்டு உபயோக சிலிண்டர்கள் வழங்குவதில் எந்தவித தடையும் இல்லை என்று குடிமைப் பொருள் வழங்கல் துறை அறிவித்துள்ளது. மேலும், வீட்டு உபயோக சிலிண்டர் தட்டுப்பாடு என வதந்தி பரப்பும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பெட்ரோல் தட்டுப்பாடு என்ற வதந்தியால் வில்லியனூர், அரும்பார்த்தபுரம் உள்ளிட்ட கிராம பகுதிகளிலும் நகர பகுதிகளில் உள்ள சில பெட்ரோல் நிலையங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதற்கு நள்ளிரவில் இருந்து வாகனங்களுடன் நீண்ட வரிசையில் பொதுமக்கள் திரண்டனர்.

இதனால் பெட்ரோல் பங்குகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. நீண்ட வரிசையில் வாகனங்களோடு மக்கள் காத்திருந்து பெட்ரோல் நிரப்பிச் செல்கின்றனர். மேலும் பலர் 25 லிட்டர் தண்ணீர் கேன் மற்றும் 10 லிட்டர் 5 லிட்டர் என கேன்களிலும் பாட்டில்களிலும் பெட்ரோலை வாங்கினர். பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் காரணமாக தொடர்ந்து ஏராளமான மக்கள் பெட்ரோல் பங்குகளை நோக்கி படையெடுத்து உள்ளனர். இன்றும் காலை முதலே பெட்ரோல் பங்குகளில் கூட்டம் அலைமோதுவதால் பரபரப்பு நிலவுகிறது.

# துறைமுகம் மதுரவாயல் 2 அடுக்கு மேம்பாலப் பணி 2027ல் நிறைவடையும்: தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரி தகவல்

சென்னை, மார்ச்.13- சென்னை துறைமுகம் மதுரவாயல் 2 அடுக்கு மேம்பாலப் பணிகள் 2027ம் ஆண்டில் நிறைவடையும் என்று தேசிய நெடுஞ்சாலை ஆணைய மண்டல அலுவலர் வீரேந்தர் சாம்பியால் தெரிவித்தார்.

சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையே 21 கி.மீ. தூரம் கொண்ட புதிய 4 வழித்தட 2 அடுக்கு மேம்பாலப் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

இதுகுறித்து, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மண்டல அலுவலர் வீரேந்தர் சாம்பியால் கூறியதாவது: தொடக்கத்தில் ஒற்றை அடுக்காக திட்டமிடப்பட்ட இப்பாலம், மாநில அரசின் கோரிக்கையை ஏற்று, 2 அடுக்காக மாற்றப்பட்டுள்ளது.

உள்ளூர் நகரப் போக்குவரத்துக்காக முதல் அடுக்கு, சென்னை துறைமுகத்துக்கு செல்லும் கனரக சரக்கு வாகனங்களுக்காக பிரத்யேகமாக 2வது அடுக்கு அமைக்கப்படுகிறது.

நகரின் முக்கிய பகுதிகளில் வாகனங்கள் பாலத்தில் ஏறவும், இறங்கவும் வசதியாக 13 சாய்தளங்கள் அமைக்கப்படுகின்றன. நேப்பியர் பாலம் பகுதியில் அதிநவீன கேபிள் பாலம் அமைக்கப்பட்டு



கிறது. போக்குவரத்து போலீசார் அனுமதியுடன் பகலில் 5 மணி நேரம், இரவில் 6 மணி நேரம் என தினமும் 11 மணி நேரம் கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. இதை 16 மணி நேரமாக அதிகரிக்க மாநில அரசிடம் அனுமதி கேட்டுள்ளோம். 2027 டிசம்பருக்குள் திட்டம் நிறைவடையும்.

நெடுஞ்சாலை பணிகள்

சென்னை பெங்களூரு விரைவுச் சாலை (262 கி.மீ.) திட்டத்தில் கர்நாடகப் பகுதி பணிகள் முடிந்துவிட்டன. தமிழகத்தில் உள்ள 106 கி.மீ. தொலைவில் 3 தொகுப்புகளின் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. தமிழகத்தில் நெடுஞ்சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்த, கடந்த 10 ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ரூ.60 ஆயிரம் கோடிக்கு மேல் முதலீடு செய்துள்ளது.

தற்போது ரூ.40 ஆயிரம் கோடி மதிப்பிலான பணிகள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் 77 இடங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலை ஆணைய சுங்கச் சாவடிகள் மூலம் கடந்த நிதி ஆண்டில் ரூ.4,300 கோடி வசூலானது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆணையத்தின் சென்னை திட்ட இயக்குநர் சிவம் சர்மா கூறும்போது, ''பிரம்மாண்டமான வார்ப்புத் தளங்களில் பாலத்தின் கான்கிரீட் பாகங்கள் முன்கூட்டியே முழுவீச்சில் தயாரிக்கப்படுகின்றன. இதனால், மழைக்காலத்திலும் இடையூறின்றி மேம்பால கட்டுமானப் பணி நடைபெறும்'' என்றார்.



# உணவில் பல்லி விழுந்ததில் 44 குழந்தைகள் உடல் நலன் பாதிக்கப்பட்ட விவகாரம் : 3 பேர் சஸ்பெண்ட்

கோவை, மார்ச்.13- கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியில் மதிய உணவில் பல்லி விழுந்ததில் 44 குழந்தைகள் உடல் நலன் பாதிக்கப்பட்ட விவகாரத்தில், 3 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கோவை கவுண்டம்பாளையத்தில் மாநகராட்சி பள்ளி உள்ளது. இங்கு 400க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். இவர்களுக்கு காலை மற்றும் மதியம் சத்துணவு சமைத்து வழங்கப்படுகிறது. தினமும் 350க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் சத்துணவு சாப்பிட்டு வருகிறார்கள். இந்தநிலையில் நேற்று முன்தினம் பள்ளியில் மதிய உணவு சாப்பிட்ட 31 மாணவர்கள், 13 மாணவிகள் என 44 பேருக்கு திடீரென வாந்தி, மயக்கம் ஏற்பட்டது.

இதனால் அதிர்ச்சி அடைந்த ஆசிரியர்கள் உடனடியாக பாதிக்கப்பட்ட 44 மாணவ மாணவிகளையும் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்களுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். நேற்று மாலையில் அனைத்து மாணவமாணவிகளும் சிகிச்சை முடிந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதற்கிடையில் சம்பவம் குறித்து கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுருபிரபாகரன் மற்றும் மாநகராட்சி பள்ளி முதன்மை கல்வி அலுவலர் ஆகியோர் விசாரணை நடத்தினர். அப்போது மாணவ மாணவிகள் சாப்பிட்ட மதிய உணவில் பல்லி இறந்து கிடப்பதை பார்த்தனர். பல்லி விழுந்ததை கவனிக்காமல், உணவை சத்துணவு ஊழியர்கள் பரிமாறியதால், அதை சாப்பிட்ட மாணவமாணவிகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது தெரியவந்தது.

மதிய உணவு தயாரிப்பில் அஜாக்கிரதையாக இருந்த ஊழியர்களிடம் மாநகராட்சி பள்ளி முதன்மை கல்வி அலுவலர் விசாரணை நடத்தினார். இந்நிலையில் அந்த பள்ளியின் சத்துணவு அமைப்பாளர் கவுசல்யா, சமையலர் மனோகரி, சமையல் உதவியாளர் ஜெயா கமலம் ஆகிய 3 பேரை சஸ்பெண்ட் செய்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். முன்னதாக நேற்று மாநகராட்சியின் வேறு பள்ளிக்கூடங்களை சேர்ந்த ஊழியர்கள் கவுண்டம்பாளையம் பள்ளியில் பணியமர்த்தப்பட்டு சமையல் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# ஹோர்முஸ் நீரிணை வழியாக 2 இந்திய கப்பல்கள் பயணிக்கலாம்

## ஈரான் அரசு அனுமதி



தெஹ்ரான், மார்ச்.13- ஹோர்முஸ் நீரிணை வழியாக இந்திய எண்ணெய் கப்பல்கள் செல்ல ஈரான் அரசு அனுமதி வழங்கியது. அணு ஆயுத ஒழிப்பு நடவடிக்கை ஒப்பந்தம் தொடர்பாக ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்கா திடீரென அந்நாட்டின் மீது கடந்த மாதம் 28ம் தேதி தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்து வரும் ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை அடைத்தது. இதனால் பல நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது.இந்நிலையில், இந்திய எண்ணெய் கப்பல்கள் செல்ல அனுமதிக்குமாறு ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டார். ஈரான் அமைச்சர் அரகாச்சியுடன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பிறகு, இந்திய எண்ணெய் கப்பல்களுக்கு ஈரான் அரசு அனுமதி அளித்துள்ளது. புஷ்பக் மற்றும் பரிமள் ஆகிய 2 இந்திய எண்ணெய் கப்பல்களுக்கு ஈரான் அனுமதி வழங்கியது. இதனால் அரபு நாடுகளில் இருந்து தடைபட்ட கச்சா எண்ணெய் கேஸ் சப்ளை மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும். இதனால் கச்சா எண்ணெய், கேஸ் தட்டுப்பாட்டுக்கு தீர்வு ஏற்படும்.

# சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் பீப்பாய் ஒன்று 100 டாலராக உயர்ந்துள்ளது



தெஹ்ரான், மார்ச்.13- சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் பீப்பாய் ஒன்று 100 டாலராக உயர்ந்துள்ளது. மேற்கு ஆசியாவில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான போர் 13வது நாளாக இன்றும் நீடித்தது. இப்போரால், வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் கப்பல்கள் பயணிக்கும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதனால் சர்வதேச அளவில் எண்ணெய் விநியோகம் தடைபட்டுள்ளது. இந்தியாவில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. இந்திய செய்திகள்

2 நாட்களுக்கு முன்பு கச்சா எண்ணெய் விலை 119.5 டாலர் வரை உயர்ந்திருந்தது. போர் விரைவில் முடியும் என டிரம்ப் அறிவித்த நிலையில் கச்சா எண்ணெய் விலை 2 நாட்களாக குறைந்து வந்தது. கச்சா எண்ணெய் கப்பல்கள் செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் முடியதால் கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் பீப்பாய் ஒன்று 100 டாலராக உயர்ந்துள்ளது.

# பாகிஸ்தானிலிருந்து ட்ரோன் மூலம் வீசப்பட்ட ரூ.8 கோடி மதிப்புள்ள போதைப்பொருள்

ஜம்மு, மார்ச்.13- காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தானில் இருந்து வந்த ட்ரோன் மூலம் வீசப்பட்ட 1.5 கிலோ ஹெராயின் போதைப்பொருளைப் பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்தனர். சுமார்



ரூ.8 கோடி மதிப்புள்ள இந்தப் போதைப்பொருள், பகதூர்புரா கிராமத்தில் உள்ள வயல்வெளியில் கண்டெடுக்கப்பட்டதாகவும், இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தகவல் தெரிவித் துள்ளனர்.

# அமெரிக்காவில் மனைவியை கொன்ற இந்தியர் பற்றி துப்பு தந்தால் ரூ.9 கோடி பரிசு தரப்படும்



நியூயார்க், மார்ச்.13- அமெரிக்காவின் மேரிலாந்தில் ஹனோவரில் கடந்த 2015ம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி டோனட் கடையில் கொடூர கொலை நடந்தது. பத்ரேஷ்குமார் சேத்தன்பாய் படேல் (35) என்ற இந்தியர் தனது மனைவி பாலக் படேலை (21) கத்தியால் பலமுறை குத்திக் கொலை செய்து விட்டு கடையின் பின்வாசல் வழியாக தப்பினார். 11 ஆண்டாகியும் படேல் எங்கிருக்கிறார், இந்தியா அல்லது கனடாவுக்கு தப்பி விட்டாரா என எப்பிஐயால் கண்டுபிடிக்க முடியவில்லை. பத்ரேஷ்குமார் படேல் பற்றி தகவல் தந்தால் ரூ.2.25 கோடி பரிசுத்தொகை அறிவித்தும் எந்த பலனும் இல்லை. இந்நிலையில், படேல் குறித்து தகவல் தருவோருக்கான பரிசுத்தொகையை எப்பிஐ ரூ.9 கோடியாக அதிகரித்துள்ளது.

# "திமுக ஆட்சி தொடர்ந்தால் பெண்களும், குழந்தைகளும் நடமாடவே முடியாது" அன்புமணி

சென்னை, மார்ச்.13- திமுக ஆட்சி தொடர்ந்தால் பெண்களும், குழந்தைகளும் நடமாடவே முடியாது. இன்னும் சில நாள்களில் இந்த அரசு விரட்டியடிக்கப்படுவதை வரும் தேர்தலில் தமிழக மக்கள் உறுதி செய்வார்கள் என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்: ''சென்னையில் கல்லூரி மாணவியை மர்ம கும்பல் காரில் கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருப்பதாக கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார்



அளிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் படிப்பதற்காக வரும் மாணவிகளுக்குக் கூட பாதுகாப்பு அளிக்க திறனற்ற நிலையில் திமுக அரசு முடங்கிக் கிடப்பது கண்டிக்கத்தக்கது.

திருச்சியில் இருந்து புராஜெக்ட் பணிக்காக திருச்சியில் இருந்து சென்னை வந்து விடுதியில் தங்கியிருந்த மாணவி, கடந்த 9ம் தேதி வெளியில் செல்வதற்காக காத்திருந்த போது, காரில் வந்த ஒரு கும்பல் அவரைக் கடத்திச் சென்று முகத்தில் மயக்கப் பொடியை பூசி பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், அதன்பின் சில மணி நேரம் கழித்து அவரை வேறு இடத்தில் இறக்கி விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

அதைத் தொடர்ந்து கடந்த 10ம் தேதி சென்னை அடையாறில் உள்ள தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பெற்று திரும்பிய மாணவியை அதே கும்பல் மீண்டும் மகிழுந்தில் கடத்திச் சென்று நடந்த கொடுமை குறித்து வெளியில் சொல்லக்கூடாது என்று மிரட்டியதாகவும் தெரிகிறது. மாணவி கடுமையாக மிரட்டப்பட்டிருப்பதால் மேலும் பல தகவல்களை தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

சென்னை பாதுகாப்பான நகரம் என்பதால் தான் பெற்றோர் தங்களின் குழந்தைகளை நம்பி சென்னைக்கு அனுப்புகின்றனர். ஆனால், மாணவியை பட்டப்பகலில் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்யும் நிலை நிலவுகிறது என்றால் தமிழ்நாட்டில் நடப்பது ஆட்சியா, காட்டாட்சியா ? என்ற ஐயம் தான் எழுகிறது. தமிழ்நாட்டில் பாலியல் வன்கொடுமைகள் நடக்காத நாளே இல்லை என்று கூறும் அளவுக்கு சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

ஆனால், இதுபற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் கடைசி நேரக் கொள்ளையிலும் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது இந்தக் கையாலாகாத அரசு. மக்களைக் காப்பதற்கு துப்பற்ற திமுக அரசு இனி ஒரு நிமிடம் கூட பதவியில் நீடிக்கக் கூடாது. இந்த ஆட்சி தொடர்ந்தால் தமிழ்நாட்டில் பெண்களும், குழந்தைகளும் நடமாடவே முடியாது. இன்னும் சில நாள்களில் இந்த அரசு விரட்டியடிக்கப்படுவதை வரும் தேர்தலில் தமிழ்நாடு மக்கள் உறுதி செய்வார்கள்'' என்று அன்புமணி கூறியுள்ளார்.



## பாபநாச சுவாமி உலகாம்பிகை தரிசனம் செய்த சரத்குமார்

### உற்சாக வரவேற்பளித்த பாஜக மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள்

பாபநாசம், மார்ச். 13-

பாபநாசத்தில் உள்ள புகழ்பெற்ற பாபநாச சுவாமி உலகாம்பிகை திருக்கோவிலுக்கு, பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் சரத்குமார் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்தார்.

*சிறப்பான வரவேற்பு:*

திருக்கோவிலுக்கு வருகை தந்த சரத்குமாரை, பாஜக மாநில துணைத்தலைவர் சுந்தர், மாநில தொழிற்பிரிவு துணைத் தலைவர் செங்குளம் கணேசன், மாநில பிரச்சார பிரிவு துணைத் தலைவர் விவேகானந்தன் ஆகியோர் இணைந்து விநாயகர் சிலை வழங்கி உற்சாகமாக வரவேற்றனர்.

*நிர்வாகிகள் பங்கேற்பு:*

இந்த வரவேற்பு நிகழ்வில் ராதாபுரம் தொகுதி பாஜக பிரமுகர் உத்திரலிங்கம், அம்பை மண்டல் தலைவர் சண்முக பிரகாஷ், விக்ரமசிங்கபுரம் நகரத் தலைவர் சந்தனமாரி, அம்பை நகரத் தலைவர் உதயகுமார், சேர்வை மேற்கு ஒன்றிய தலைவர் இசக்கிமுத்து மற்றும் சேரை கிழக்கு ஒன்றிய தலைவர் அஸ்வின் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்துகொண்டனர். சுவாமி தரிசனம் செய்த சரத்குமார், கோவிலின் சிறப்புகளைக் கேட்டறிந்தார்.

## குமரியில் தவெக தலைவர் விஜய் பயண நிபந்தனைகளைத் திரும்பப் பெற வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்

கன்னியாகுமரி, மார்ச். 13-

கன்னியாகுமரி மாவட்டத்தில் தவெக சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கிழக்கு மாவட்டச் செயலாளர் S.R. மாதவன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர். *முக்கிய கோரிக்கைகள்:*



விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய, தமிழ்நாடு அரசு உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பிற்கான அரசாணையை வெளியிட வேண்டும். தமிழகத்தில் சீர்குலைந்து வரும் சட்டம்ஒழுங்கு மற்றும் கட்டுக்கடங்காமல் பெருகி வரும் போதைப்பொருள் புழக்கத்தைத் தடுக்கத் தவறிய திமுக அரசுக்கு வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களின் மக்கள் சந்திப்புப் பயணங்களை முடக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட ஜனநாயகமற்ற வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் முழக்கங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.



■ புதுச்சேரி மாநிலம் வில்லியனூரில் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையில் ஈடுபட்டதாக, கணுவாப்பேட்டை சாமியார் தோப்பு பகுதியை சேர்ந்த முருகன் என்கின்ற வேல்முருகன் வயது 30 என்பவரை ரோந்து பணியில் ஈடுபட்ட போலீசார் கைது செய்தனர். அவர் மீது வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப., 2027ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக, துறை சார்ந்த தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான முதற்கட்டப் பயிற்சியினை துவக்கி வைத்து பேசினார்.




■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாநகராட்சி, கோவில்வழி புதுரோடு பேருந்து நிறுத்தம் அருகில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக்கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மணிஷ் நாரணவரே, மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வணிகவரி இணை ஆணையர் சா.முகமது அர்சத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்."

## ரூ.3 கோடி மதிப்பில் கம்யூனிட்டி ஹால் மற்றும் தொழிற்பயிற்சி கூடம்

### லயன்ஸ் கவர்னர் ஷாஜஹான் அடிக்கல் நாட்டினார்

திசையன்விளை, மார்ச். 13-

நெல்லை மாவட்டம் திசையன்விளையில் லயன்ஸ் கிளப் சார்பில், மாவட்ட லயன்ஸ் கவர்னர் வருகை தின விழா குருநாதன் மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. ஏழைகள் பயன்பெறும் வகையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கம்யூனிட்டி ஹால் மற்றும் தொழிற்பயிற்சி கூடம் கட்டப்பட உள்ளது. இதற்கான அடிக்கல்லை மாவட்ட லயன்ஸ் கவர்னர் ஷாஜஹான் நாட்டினார்.




*நலத்திட்ட உதவிகள்*

:லயன்ஸ் கிளப் தலைவர் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாவட்ட கவர்னர் ஷாஜஹான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ஏழை எளிய மக்களுக்கு தையல் இயந்திரங்கள், புத்தாடைகள், மளிகைப் பொருட்கள், கல்வி நிதி உதவி மற்றும் மருத்துவ நிதி உதவிகள் ஆகியவற்றை அவர் வழங்கினார். தொடர்ந்து, மலையடிப்புதூரைச் சேர்ந்த தேனீ வளர்ப்பு நிபுணர் இசக்கிமுத்து கௌரவிக்கப்பட்டார்.

*நிர்வாகிகள் பங்கேற்பு:*

முன்னாள் தலைவர் தங்கையா கணேசன் புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்திப் பேசினார். விழாவில் மாவட்ட துணை கவர்னர்கள் வெற்றி செல்வன், ஜான் சுபாஷ், முன்னாள் கவர்னர் சுயம்புராஜன், மாவட்ட நிர்வாகிகள் பிரேம்குமார், சுப்பையா, ஜான் ராஜா, பன்னீர் செல்வராஜ் மற்றும் மாவட்ட செய்தி தொடர்பாளர் வனமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பொருளாளர் ராஜேந்திரன், செயலாளர் ஜிபிஎம்.குமார் ஆகியோர் முன்னிலை வகித்த இந்த நிகழ்வை கமலா சுயம்பு ராஜன் மற்றும் ருகன்யா ஆகியோர் தொகுத்து வழங்கினர். இதில் வியாபாரிகள் சங்க பேரமைப்பு தலைவர் சாந்தகுமார், முன்னாள் காவல்துறை அதிகாரி சுந்தர பெருமாள் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களும், லயன்ஸ் கிளப் உறுப்பினர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள முள்ளிப்பள்ளம் கிராம ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் இரண்டு வகுப்பறை கூடுதல் கட்டிடத்தை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். அருகில் திமுக ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன், மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## புதுவை அரசுக்கு எதிராகத் திரண்ட தவெக தொண்டர்கள்முன்னாள் எம்எல்ஏக்கள் முன்னிலை

புதுச்சேரி, மார்ச். 13-

புதுச்சேரி மாநில அரசின் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்தும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் அரசு தோல்வியடைந்துவிட்டதாகக் குற்றம் சாட்டியும், சுதேசிமில் அருகே தமிழக வெற்றிக் கழகம் (தவெக) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

*அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்:*

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய நிர்வாகிகள், புதுச்சேரியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கத் தவறிய அரசு, மாநிலத்தின் மிக முக்கியப் பிரச்சினைகளை அலட்சியப்படுத்துவதாகக் குற்றம் சாட்டினர். மேலும், மாநிலம் முழுவதும் போதைப்பொருள் விற்பனை தங்குதடையின்றி நடைபெறுவதாகவும், இதன் விளைவாக கொலை, கொள்ளை போன்ற குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இதைக் கட்டுப்படுத்தத் தவறிய அரசு வன்மையான கண்டனத்திற்குரியது என்றும் முழக்கமிட்டனர்.

*முன்னிலை வகித்த தலைவர்கள்:*

இந்த ஆர்ப்பாட்டத்தில் தவெகபுதுச்சேரி மாநிலத் தேர்தல் கண்காணிப்பாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சாமிநாதன், துரைசாமி, சந்திரன் (முன்னாள் ஐ.ஜி.), முத்தியால்பேட்டை ராமு, முதலியார்பேட்டை மணிபாலன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்துகொண்டனர்..

## "சாதிவாரி கணக்கெடுப்பு நடத்து!" திமுக அரசுக்கு எதிராக சேலத்தில் தவெக அதிரடிப் போராட்டம்!

சேலம், மார்ச். 13-

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகப் பொதுச்செயலாளர் என். ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சேலம் கோட்டை மைதானத்தில் இன்று காலை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




ஆர்ப்பாட்டத்தில், பின்வரும் முக்கியக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன:

*சாதிவாரி கணக்கெடுப்பு:* மாநில அரசு உடனடியாகச் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, அதற்கான ஆய்வைச் சமர்ப்பிக்க வேண்டும்.

*சட்டம் ஒழுங்கு:* தமிழகத்தில் சீர்குலைந்து வரும் சட்டம்ஒழுங்கைப் பாதுகாப்பதிலும், கட்டுக்கடங்காமல் பெருகி வரும் போதைப்பொருள் புழக்கத்தைத் தடுப்பதிலும் தோல்வியடைந்த திமுக அரசைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் தமிழன் ஆ. பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சேலம் மாவட்டத்தின் அனைத்து நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர், ஊராட்சி, கிளை, வார்டு நிர்வாகிகள் மற்றும் சார்பு அணித் தொண்டர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.



## மானாமதுரை ஆகாஷ் மரண வழக்கை 60 நாளில் முடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை: மார்ச்.13-

மானாமதுரை ஆகாஷ் மரண வழக்கு விசாரணையை 60 நாட்களில் முடிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சீயோன்நகரில் சாலையில் நடந்து சென்றவர்களை அரிவாளால் வெட்டியதாக கைது செய்யப்பட்ட ஆகாஷ் என்பவர், காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இது தொடர்பாக சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், போலீஸார் தாக்கியதால் ஆகாஷ் உயிரிழந்ததாக கூறி போலீஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யக் கோரி ஆகாஷ் உடலை வாங்காமல் அவரது உறவினர்கள் மானாமதுரை தேசிய நெடுஞ் சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆகாஷின் தந்தை இழப்பீடு கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, ஆகாஷ் மரணம் தொடர்பாக சிபிசிஐடி பதிவு செய்துள்ள வழக்கில், எஸ்சி, எஸ்சி தடுப்பு சட்டப்பிரிவை சேர்க்கவும், மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தி வருபவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வழக்கறிஞர்கள் கு.சாமிதுரை தலைமையில் வழக்கறிஞர்கள் ஆணையர்கள் குழு அமைத்தும் நீதிபதி உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவையடுத்து வழக்கறிஞர்கள் ஆணையர்கள் ஆகாஷின் உறவினர்களை நேரில் சந்தித்து போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டனர். இருப்பினும் போலீஸார் மீது கொலை வழக்கு பதிவு செய்யும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என மறுத்துவிட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு எதிராக கிராம மக்கள் சார்பில் நான்கு வழிச்சாலையில் இன்னொரு பகுதியில் திடீர் போராட்டம் நடத்தப்பட்டது. அவர்களை வழக்கறிஞர்கள் ஆணையர்கள் சமரசம் செய்தனர்.

இந்நிலையில், ஆகாஷ் வழக்கு நீதிபதி எல்.விக்டோரியா கௌரி முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், 'உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் போராட்டத்தை கைவிடாமல் தொடர்கின்றனர். நான்கு வழிச்சாலையின் மத்தியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்' என்று கூறி போராட்டம் தொடர்பான வீடியோ பதிவு தாக்கல் செய்யப்பட்டது.

அப்போது நீதிபதி, 'தேசிய நெடுஞ்சாலையை விட்டு வேறு இடத்திற்கு சென்று போராட்டத்தைத் தொடரலாம் என அறிவுறுத்திய பிறகும் இடத்தை காலி செய்யாமல் இருப்பது ஏன்? முதல் தகவல் அறிக்கையில் வன்கொடுமை சட்டம் சேர்க்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகும் போராட்டத்தை தொடர்வது ஏன்?' என கேள்வி எழுப்பினார்.

அரசுத் தரப்பில், 'குறிப்பிட்ட சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், பிற சமூகத்தினர் சிரமத்திற்கு ஆளாகுவதாக கருதுவதால் பிரச்சினை எழும் சூழல் உள்ளது' எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதி, 'கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும், பொதுமக்களை சிரமத்திற்கு ஆளாக்கும் வகையில் போராட்டத்தை கைவிடாமல் தொடர்பவது சரியானது அல்ல. மானாமதுரை பழைய பேருந்து நிலையம் அருகே சென்று போராட்டத்தைத் தொடரலாம். போராட்டக்காரர்கள் தேசிய நெடுஞ்சாலையை காலி செய்ய வேண்டும். தவறினால் அவர்களை அகற்ற போலீஸார் நடவடிக்கை எடுக்கலாம்' என்றார்.

அரசுத் தரப்பில், 'நிபுணர் குழுவின் உடற்கூராய்வு அறிக்கை தொடர்பாக மனுதாரர் தெரிவிக்கும் ஆட்சேபனை ஏற்கும்படியாக இல்லை' எனக் கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், 'உடற்கூராய்வு விதிகள் முறையாக பின்பற்றப்படவில்லை. அதற்காக மறு உடற்கூராய்வு செய்ய கோரவில்லை. வழக்கு விசாரணையை விரைவில் முடிக்க உத்தரவிட வேண்டும்' எனக் கூறப்பட்டது.

இதையடுத்து, விசாரணையை 60 நாட்களில் முடிக்க வேண்டும் என்று கூறி விசாரணை நீதிபதி ஒத்திவைத்தார்.



## திருப்பூரில் எஸ்டிபிஜ கட்சி சார்பில் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி: திரளானோர் பங்கேற்பு

திருப்பூர், மார்ச். 13-

திருப்பூர் வடக்கு மாவட்ட எஸ்டிபிஜ கட்சி சார்பில், சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி, எஸ்.வி. காலனியில் , தொகுதித் தலைவர் முகமது யாசின் தலைமையில் நடைபெற்ற விழாவிற்கு, தொகுதிச் செயலாளர் பாஷா மைதீன் வரவேற்றுப் பேசினார். தொகுதிப் பொருளாளர் அப்பாஸ் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். எஸ்டிபிஜ கட்சியின் மாநிலப் பொருளாளர் முஸ்தபா மற்றும் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் திமுக மண்டலத் தலைவர் தம்பி கோவிந்தராஜ், பகுதிச் செயலாளர் போலார் சம்பத், கவுன்சிலர் ராஜேந்திரன், திமுக வார்டு செயலாளர்கள் நித்தியானந்தம், கோமகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும், எஸ்டிபிஜ கட்சியின் மாநிலச் செயலாளர் கரீம், மாவட்டத் தலைவர் பஷீர் அஹமது, மாவட்ட பொதுச்செயலாளர் அப்துல் வகாப், மகளிர் அணி மாவட்டத் தலைவர் பாத்திமா உட்பட கட்சியின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். முடிவில், மேட்டுப்பாளையம் கிளைச் செயலாளர் சேக் அலாவுதீன் நன்றி கூறினார்.




## ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழா

தென்காசி, மார்ச். 13-

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழா கல்லூரித் தலைவர் பொறியாளர் ஜீசஸ் ராஜா வழிகாட்டுதலில் நடைபெற்ற விழாவிற்கு, முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமை வகித்தார். நிர்வாக இயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் அறிவியல் துறை முன்னாள் பேராசிரியை முனைவர் விஜயலட்சுமி கலந்து கொண்டார். அவர் "பெண்களின் கல்வி, சமூக முன்னேற்றம் மற்றும் தன்னம்பிக்கையே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது. இன்றைய சூழலில் பெண்கள் சமூகத்தில் வகிக்கும் முக்கியப் பங்கும், அவர்கள் அடைய வேண்டிய சாதனைகளும் அவசியம்" என மாணவிகளுக்குப் பயனுள்ள வகையில் உரையாற்றினார்.

மாணவி சசி வரவேற்புரை நிகழ்த்தினார். விழா ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பேராட்சி, விருந்தினர்களைப் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். மேலும், கல்லூரி முதல்வர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆகியோர் விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினர். துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரி மாநிலம், பிள்ளையார் குப்பம் கூனிமுடக்கு தண்ணீர் தொட்டி அருகே, சாலையைக் கடக்க முயன்ற மான் ஒன்று அவ்வழியாக வந்த வாகனம் மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தது. விபத்தினால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இது குறித்து அப்பகுதி மக்கள் வனத்துறைக்குத் தகவல் தெரிவித்தனர். சாலையோரம் வசிக்கும் வனவிலங்குகள், குடிநீர் அல்லது உணவு தேடி சாலைகளைக் கடக்கும்போது இத்தகைய விபத்துகள் ஏற்படுவது தொடர் கதையாகி வருவதால், வாகன ஓட்டிகள் கவனமுடன் செயல்பட வேண்டும் என வனத்துறை, சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ தென்காசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாவூர்சத்திரம் ஔவையார் மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடிமையங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால், இ.ஆ.ப. உள்ளார்.

## புதுச்சேரியில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை

### பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தல்

புதுச்சேரி, மார்ச் 13-

புதுச்சேரி மாவட்டத்தில் பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு விநியோக நிலைமை குறித்து ஆய்வு செய்வதற்கான முக்கிய ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.



*பாட்டில்களில் பெட்ரோல் விற்கத் தடை:*

இக்கூட்டத்தில், சில பெட்ரோல் விற்பனை நிலையங்களில் பாட்டில்கள் மற்றும் கேன்களில் பெட்ரோல் விற்பனை செய்யப்படுவது, பெரும் விபத்துகளுக்கும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கும் வழிவகுக்கும் என்பதால், பெட்ரோல் மற்றும் டீசலை வாகனங்களில் மட்டுமே நிரப்ப வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் கடுமையாக அறிவுறுத்தினார்.

*உரிமம் ரத்து செய்யப்படும்:*

எண்ணெய் நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களையும் கண்காணித்து, இந்த உத்தரவை முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தின் இந்த உத்தரவை மீறிச் செயல்படும் விற்பனை நிலையங்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தேவைப்பட்டால் அவர்களின் விற்பனை உரிமம் (Licence) ரத்து செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*பொதுமக்களுக்கு வேண்டுகோள்:*

புதுச்சேரி மாவட்டத்தில் போதுமான அளவு பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு உள்ளது என்றும், எந்தவிதமான பற்றாக்குறையும் இல்லை என்றும் ஆட்சியர் தெளிவுபடுத்தினார். எனவே, பொதுமக்கள் தேவையற்ற பீதியால் அதிகப்படியான எரிபொருளை வாங்கிச் சேமித்து, செயற்கையான பற்றாக்குறையை உருவாக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.




## திருநெல்வேலி மாவட்ட சமூக நலத்துறை சார்பில் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்

திருநெல்வேலி, மார்ச் 13-

திருநெல்வேலி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 2026ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின விழா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாநில அளவில் நடத்தப்பட்ட சுவரொட்டி (Poster making) போட்டியில், திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் மாணவி S. உமா சரஸ்வதி மாநில அளவில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார். கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவியை, கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் சக மாணவிகள் பாராட்டினர். இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரி முதல்வர் டாக்டர் து. லில்லி மற்றும் பேராசிரியர்கள் ஒருங்கிணைத்துச் செய்திருந்தனர்.



## முப்பெரும் தலைவர்கள் பிறந்தநாள் விழா உடுமலையில் பொதுமக்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்கல்

உடுமலை, மார்ச். 13-

திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டம், உடுமலை மேற்கு ஒன்றியம், எரிசினம்பட்டி கிராமத்தில், புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா மற்றும் புரட்சித்தமிழர் எடப்பாடியார் ஆகிய முப்பெரும் தலைவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட கழக செயலாளர் சி.மகேந்திரன் எம்எல்ஏ அவர்கள் கலந்துகொண்டு, பொதுமக்களுக்குப் பரிசுப் பொருட்களை வழங்கி விழாவைத் தொடங்கி வைத்தார். இதில் உடுமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் காமாட்சி சுந்தரம், பாசறை மாவட்ட செயலாளர் கவியரசு மற்றும் கட்சியின் ஒன்றிய, சார்பு அணி நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



■ ராதாபுரம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஆண்கள் கழிப்பறை அருகே நல்ல பாம்பு ஒன்று பதுங்கியிருந்ததைக் கண்ட ஊழியர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் அதிர்ச்சியடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ராதாபுரம் தீயணைப்பு வீரர்கள், பதுங்கியிருந்த சுமார் 5 அடி நீளமுள்ள நல்ல பாம்பை லாவகமாகப் பிடித்துச் சென்றனர். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள நீதிமன்ற வளாகத்தில் பாம்பு பிடிபட்ட சம்பவம் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000